**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**
**O.S.No.70 of 2021**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | **PW3** |
| **Name of the Witness** | : | ராமமூர்த்தி |
| **Father's Name** | : | கோபால்பிள்ளை |
| **Age** | : | 69 |
| **Occupation** | : | ஆவண எழுத்தர் |
| **Address** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 2nd day of November, 2023.

முதல் விசாரணை :-

1. நான் கடலூர், திருப்பாதிரிபுலியூரில் குடியிருந்து, பத்திர எழுத்தராக பணிபுரிகின்றேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வந்திருந்தது. அதனடிப்படையில், நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். (சாட்சி நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை காண்பித்தார்). வாதி ராமசாமியை தெரியும். அவர் கிழக்கு ராமாபுரத்தை சேர்ந்தவர். தனகோடி என்பவரை தெரியும். அவர் சிதம்பரம் வட்டம், திட்டுக்காட்டுர் என்ற ஊரை சேர்ந்தவர். என்னிடம் காட்டப்படும் வாதசாஆ 9 மதிப்பு காணாத உயில் சாசனம் என்ற ஆவணத்தை தனகோடி அம்மாள் என்பவர் கூறியதன் அடிப்படையில் நான் தயார் செய்தேன். அந்த ஆவணத்தில் தனகோடி அம்மாள் கையொப்பம் செய்யவில்லை, கைரேகை தான் வைத்துள்ளார். அந்த உயில் ஆவணம் 07.02.2020 அன்று எழுதப்பட்டது. அந்த ஆவணம் எழுதும்போது தனகோடி அம்மாள் மற்றும் இரு சாட்சிகள் வந்திருந்தனர். உயில் தயார் செய்யப்பட்ட பிறகு அந்த உயிலை நான் தனகோடி அம்மாளிடம் படித்து காண்பித்தேன். அதன்பின்னர் தனகோடி அம்மாள் கைரேகை வைத்தார். அவருக்கு பிறகு சாட்சி பாலகிருஷ்ணன் கையொப்பம் செய்தார். பின்னர் சாட்சி வேலுசாமி கையொப்பம் செய்தார். உயில் எழுதும்போது தனகோடி அம்மாளுக்கு யாரேனும் பணம் கொடுத்தார்களா

என்றால், இல்லை. தனகோடி அம்மாள் தன் தம்பிக்கு மனப்பூர்வமாக எழுதி வைத்த உயில் ஆவணம் ஆகும்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. நான் சுமார் நாற்பது ஆண்டு காலமாக ஆவண எழுத்தராக பணிபுரிகிறேன். வாதசாஆ 9 உயிலில் ஆரம்பம் முதல் கடைசி வரை உள்ள விவரங்கள் எல்லாம் சரியானவைதானா என்றால் ஆமாம். நான், தனகோடி அம்மாள் சொல்ல சொல்ல மாதிரி தயார் செய்து, அதன்பிறகு வாதசாஆ 9 உயில் ஆவணத்தை தயார் செய்தேன். வாதசாஆ 9 ஆவணத்தில் பல பத்திரங்களை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்த பத்திரங்களை பார்வையிட்டபிறகு உயில் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம், ஆவணங்களை பார்வையிட்டபிறகு தான் நான் உயில் தயார் செய்தேன். நான் தனகோடி அம்மாளுக்கு வாதசாஆ 9 ஆவணம் எழுதுவதற்கு முன்பு, ஏதேனும் ஆவணங்களை அவருக்காக எழுதியுள்ளேனா என்றால் இல்லை. வாதசாஆ 9 உயில் ஆவணத்தை பதிவு செய்யவேண்டும் என்று தனகோடி அம்மாள் கேட்கவில்லையா என்றால், பதிவு செய்யவேண்டுமென்று தான் கூறினார்கள், ஆவணம் தயார் செய்யப்பட்டு கையெழுத்து பெறப்பட்டபிறகு, நான் பதிவு அலுவலகம் சென்று பார்த்தபோது, அலுவலக நேரம் முடிந்து விட்டதால் அன்றைய தினம் உயில் ஆவணத்தை பதிவு செய்யவில்லை. நேரமாகிவிட்டது என்று கூறி, மறுநாள் பதிவு செய்ய வாருங்கள் என தனகோடி அம்மாளிடம் நான் கூறினேன். நான் கூறியவாறு, மறுநாள் தனகோடி அம்மாள் வந்து என்னை பார்க்கவில்லை.

3. வாதசாஆ 9 ஆவணம் யார், யாருக்கு ஆதரவாக எழுதினார் என்றால், தனகோடி அம்மாள் தனது தம்பி ராமசாமிக்காக எழுதி வைத்த உயில் ஆவணம் ஆகும். வாதசாஆ 9 ஆவணத்தில் பக்கம் 4 ல் "<u>இதற்கு ஆதரவாக மேற்சொன்ன கிரயப்பத்திரங்கள் தான</u>

செட்டில்மெண்ட் பத்திரங்கள் தங்களிடம் நான் ஒப்புக்கொடுத்துள்ளேன்" என்ற வாசகம் தனகோடி அம்மாள் சொல்லித்தான் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். தங்களிடம் கொடுத்துவிட்டேன் என குறிப்பிடும் வாசகம் தன் தம்பி ராமசாமியிடம் தனகோடி அம்மாள் மேற்கண்ட ஆவணங்களை கொடுத்ததை பற்றி தான் குறிப்பிடுகிறது என்றால் சரிதான். நான் உயில் ஆவணம் தயார் செய்ய பார்வையிட்ட ஆவணங்களைத்தான் ராமசாமியிடம் தனகோடி அம்மாள் என் முன்பு கொடுத்தாரா என்றால், இல்லை. உயில் ஆவணம் எழுதும்போது ராமசாமி வரவில்லை. என்னிடம் காண்பித்த ஆவணங்களை தன் தம்பி ராமசாமியிடம் தனகோடி அம்மாள் கொடுத்துவிடுகிறேன் என கூறியதைத்தான் நான் அவ்வாறு உயிலில் எழுதியுள்ளேன். வாதசாஆ 9 ஆவணத்தில் ஒப்புக்கொடுத்துள்ளேன் என எழுதப்பட்டுள்ளது என்றும், ஒப்புக்கொடுத்துவிடுகிறேன் என எழுதப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புக்கொடுத்துவிடுகிறேன் என்பதை தான் நான் அவ்வாறு எழுதியுள்ளேன். வாதசாஆ 9 ஆவணத்தில் ஆவணம் வரைந்தவர் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றும், ஆவணம் வரைந்தவர் மற்றும் சாட்சி உள்பட என குறிப்பிட்டு நான் கையொப்பம் செய்யவில்லை என்றால், சரிதான். நான் சாட்சி அல்ல. நான் அந்த ஆவணத்தை தயார் செய்தேன், அந்த வகையிலேயே கையொப்பம் செய்துள்ளேன். வாதசாஆ 9 ஆவணம், நான், ராமசாமி கூறியதன் அடிப்படையிலேயே எழுதப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. வாதசாஆ 9 ஆவணத்தில் உள்ள கைரேகைகள் ராமசாமியின் சகோதரி தனகோடி அம்மாளின் கைரேகைகள் அல்ல என்றால் சரியல்ல. சாட்சிகள் இருவரும் என் முன்பு கையொப்பம் செய்யவில்லை என்றும், மாறாக என் முன்னிலையில் சாட்சிகள் கையொப்பம் செய்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வாதசாஆ 9 ஆவணம், ராமசாமி சொல்லி

என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றும், நான் ராமசாமிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*